**Date: 12.08.26**

# வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை மசோதா: நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்ப திட்டம்



**புது தில்லி, ஆக. 11:** வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை)சட்டத் திருத்த (எஃப்சிஆர்ஏ) மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்ப மத்திய அரசு பரிசீலித்து வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பதோடு, மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என காங்கிரஸ் மற்றும் திரிணமூல் காங்கிரஸ் கோரிக்கை வைத்து வரும் நிலையில் மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு அனுப்ப மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

கடந்த மார்ச் 25-ஆம் தேதி மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட் எஃப்சிஆர்ஏ மசோதா அரசு அல்லாத அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு நிதிக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

நடப்பு நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் இந்த மசோதாவை மத்திய அரசு நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நீட் வினாத்தாள் கசிவு, ஜந்தர் மந்தரில் மாணவர்கள் மீது காவல் துறை நடத்திய தடியடி, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை கையாடல் விவகாரம் ஆகியவற்றால் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆலோசனைக் குழு (பிஏசி) கூட்டத்தில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா, காங்கிரஸ் எம்.பி. ஜெய்ராம் ரமேஷ், திமுக எம்.பி.திருச்சி சிவா மற்றும் பிஜு ஜனதா தள எம்.பி.சஸ்மித் பத்ரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகையில், 'சிறுபான்மையினர் நிதி உதவி பெறுவதற்கு எதிராக எஃப்சிஆர்ஏ மசோதா இருப்பதாக காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக ஆகியவை அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து, எஃப்சிஆர்ஏ மசோதாவை கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்புவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கான தீர்மானம் மக்களவையில் புதன்கிழமை (ஆக.12) முன்மொழியப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' எனத் தெரிவித்தன.



Phone No: 73739 11577 & 73739 11133

# வந்தே மாதரம் பாடலை அவமதிப்பது இனி தண்டனைக்குரிய குற்றம்

## மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்

**புது தில்லி, ஆக.11:** தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்க வகை செய்யும் மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளித்தார்.

'தேசிய கௌரவம் மீதான அவமதிப்புகள் தடுப்புச் சட்ட திருத்த மசோதா-2026' என்ற பெயரிலான இந்த மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஜூலை 29-ஆம் தேதியும், மக்களவையில் ஜூலை 30-ஆம் தேதியும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது, குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, இந்த மசோதா சட்டமாக மாறியுள்ளது. அரசிதழில் அறிவிக்கை செய்தவுடன், இந்த சட்டம் அமலுக்கு வரும்.

தேசிய கீதமான ஜன கண மன பாடலுக்கான அதே சட்டப் பாதுகாப்பை தேசியப் பாடலான வந்தே மாதரத்துக்கும் வழங்குவதுடன், அந்தப் பாடலுக்கு இழைக்கப்படும் எந்தவொரு அவமதிப்புக்கும் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது.

வரும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி தில்லி செங்கோட்டையில் கொண்டாடப்படும் சுதந்திரதின விழாவில், முதல் முறையாக வந்தே மாதரம் பாடல் பாடப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அண்மையில் தெரிவித்தது.

முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜனவரி 28-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில், 'வந்தே மாதரம்' தேசிய பாடலை பாடுவதற்கான முதல்கட்ட நெறிமுறைகளை வழங்கியது. குடியரசுத் தலைவர் வருகை, தேசியக் கொடியேற்றம், மாநில ஆளுநர்களின் உரைகள் போன்ற அரசு நிகழ்வுகளில், 3 நிமிஷங்கள் 10 விநாடிகள் நீளமுள்ள தேசியப் பாடலின் ஆறு சரணங்களும் முழுமையாகப் பாடப்பட வேண்டும். தேசியப் பாடலும் தேசிய கீதமும் பாடப்படும்போது, தேசியப் பாடல் முதலில் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிட்டது.

# 3.92 டிரில்லியன் டாலருடன் உலகின் 6-ஆவது பெரும் பொருளாதார நாடாக திகழும் இந்தியா

**புது தில்லி, ஆக.11:** 2025-26 நிதியாண்டில் 3.92 டிரில்லியின் டாலர் பொருளாதாரத்துடன் உலகின் 6-ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்ந்ததாக நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் செளதரி செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) 2026, ஏப்ரலில் வெளியிட்ட உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த எழுத்துபூர்வ பதிலில், '2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.3.92 டிரில்லியன் டாலர் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (ஜிடிபி) உலகின் 6-ஆவது பெரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்ந்தது.

அமெரிக்கா டாலர் மாற்று விகிதங்களின் அடிப்படையில் இந்த தரவரிசைப் பட்டியலை ஐஎம்எஃப் வெளியிட்டுள்ளது.

**மத்திய அரசு**



பொருளாதார வளர்ச்சி, அந்நிய செலாவணி மாற்று விகிதம் மற்றும் விலைகளில் ஏற்படும் மாற்றும், தேசிய கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் மற்றும் பிற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி காரணமாக இதில் மாற்றங்கள் நிகழலாம்.

இருப்பினும், இந்திய பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த விரிவான வியூகக் கொள்கைகளை இந்தியா செயல்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகைத் திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்துதல் உள்ளிட்ட உற்பத்தித் துறையை ஊக்குவிக்கும் முன்னெடுப்புகள், எளிமையான அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கை, நேரடி வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) சீர்திருத்தங்கள் என பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது' என குறிப்பிட்டார்.

**வாராக் கடன் குறைவு:** மற்றொரு கேள்விக்கு அவர் அளித்த பதிலில், 'பொதுத் துறை வங்கிகளின் மொத்த வாராக் கடன் (என்பிஏ) 2024, மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி ரூ.3.39 லட்சம் கோடியாக இருந்த நிலையில் 2026, மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி ரூ.2.45 லட்சம் கோடியாக குறைந்துள்ளது. பொதுத் துறை வங்கிகளில் நிகழ்ந்த மோசடிகளின் எண்ணிக்கை 2023-24-இல் 54,850-ஆக இருந்த நிலையில் 2025-26-இல் 5,786-ஆக குறைந்துள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.



Phone No: 73739 11577 & 73739 11133

# விபி–ஜிராம்–ஜி திட்டத்தில் உருவான வேலைவாய்ப்புகள்

## நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தகவல்

**புது தில்லி, ஆக. 11:** மத்திய அரசின் விபி-ஜிராம்-ஜி திட்டம் அமல்படுத்தப்பட்ட கடந்த ஜூலை 1-ஆம் தேதி இருந்து ஒரு மாதத்தில் 9.69 கோடிக்கு மேல் மனித வேலை நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உதாரணமாக 10 பேருக்கு 10 நாள்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டால், அந்த இரண்டின் பெருக்குத் தொகையான 100 என்பது மனித வேலைநாளாக கணக்கிடப்படுகிறது.

மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்துக்கு (100 நாள் வேலை) பதிலாக கடந்த 125 நாள் வேலைத் திட்டத்தை (விபி-ஜி ராம்-ஜி) மத்திய அரசு கடந்த ஜூலை 1-ஆம் தேதி முல் அமல்படுத்தியது.

இந்நிலையில் இது தொடர்பாக மக்களவையில் செவ்வாய்க்கிழமை கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சிவராஜ்சிங் செளஹான் கூறியதாவது:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு மாற்றாக ஜூலை 1-ஆம் தேதி முதல் விபி-ஜிராம்-ஜி திட்டம் கிராமப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. அனைத்து மாநில, யூனியன் பிரதேச அரசுகளும் இத்திட்டத்தின்படி முறைப்படியான அறிவிப்பை வெளியிட்டு பணிகளைத் தொடங்கியுள்ளன. திட்ட மாற்றம் என்பது எவ்வித சிக்கலுமின்றி நிகழ்த்தப்பட்டது. அமல்படுத்தப்பட்ட ஒரு மாதத்தில் 9.69 கோடிக்கு மேல் மனித வேலை நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் உள்ள வேலைவாய்ப்புப் பெற தகுதியான நபர்களுக்கு ஆண்டுக்கு 125 நாள் கண்டிப்பாக வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவது என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் பணியாற்ற முன்வருபவர்களுக்கு உடல் உழைப்பு சார்ந்த பணிகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

# மின்சார வாகனத்துக்கான ஊக்கத் தொகை திட்டம்: 2028 மார்ச் 31 வரை நீட்டிப்பு

### மானியம் பாதியாகக் குறைப்பு

**புது தில்லி, ஆக.11:** 'பிஎம் இ டிரைவ்' என்று பிரதமரின் மின்சார வாகனப் புரட்சித் திட்டத்தின் கீழ் மின்சார இருசக்கர வாகனங்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையானது வரும் 2028-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே நேரம், ஊக்கத் தொகையானது பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, '2025-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 2028-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை பதிவு செய்யப்பட்ட மின்சார இருசக்கர வாகனங்களுக்கு, மணிக்கு ஒரு கிலோவாட்பேட்டரிதிறனுக்குரூ. 2,500 வீதம் ஊக்கத்தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு வாகனத்துக்கு ரூ. 5,000 வரை வழங்கப்படும்.

அதிகபட்சம் ரூ. 1,50,000 உற்பத்தி (தொழிற்சாலை) விலை உடைய மின்சார இருசக்கர வாகனங்களுக்கு மட்டுமே இந்த ஊக்கத்தொகைத் திட்டம் பொருந்தும். மேலும், வாகனத்தின் விலை குறைப்பு அடிப்படையில், இந்த ஊக்கத்தொகை அளவு மாறுபடும். அதாவது, ஊக்கத்தொகையானது குறிப்பிடப்பட்ட தொகை அல்லது தொழிற்சாலை அளவிலான வாகனத்தின் விலையில் 15 சதவீதம் அளவில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்' என்று மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, 2024-25-ஆம் நிதியாண்டில் இந்த ஊக்கத்தொகை மணிக்கு ஒரு கிலோவாட் பேட்டரி திறனுக்கு ரூ. 5,000 என்ற விகிதத்தில்கணக்கிடப்பட்டு,அதிகபட்சமாக ஒரு வாகனத்துக்குரூ. 10,000 வரை வழங்கப்பட்டது.

நாட்டில் மின்சார வாகன உற்பத்தியை மேம்படுத்துவது மற்றும் வாடிக்கையாளர்களிடையே மின்சார வாகனத்தின் மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ரூ. 11,900 கோடி ஒதுக்கீட்டுடன் கடந்த 2024-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது நிதி வரம்புக்கு உட்பட்ட திட்டம் என்பதால், இத் திட்டத்துக்கான அல்லது அதன் துணைப் பிரிவுகளுக்கான நிதியானது திட்டத்தின் இறுதி தேதியான 2028-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிக்குள் தீர்ந்துவிட்டால், ஊக்கத்தொகை திட்டம் நிறுத்தப்பட்டு, மேற்கொண்டு எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்படாது.

இத் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்துப்பிரிவுகளுக்கும்2028-ஆம் ஆண்டு மார்ச் 31 கடைசி தேதி என்பதால், இத் திட்டத்தின் அனைத்து பிரிவுகளின் கீழ் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு 2027-ஆம் ஆண்டு டிசம்பர் 31 கடைசி தேதியாகும் என்றும் அறிவிக்கையில் மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்றத்தில் நிறைவேறியது தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா

**புது தில்லி, ஆக. 11:** நாடு முழுவதும் உள்ள பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் நியமன நடைமுறைகளுக்காக தேசிய தீர்ப்பாய ஆணையம் (என்டிசி) அமைக்க வழிவகுக்கும் தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா-2026, மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதா மக்களவையில் கடந்த திங்கள்கிழமை நிறைவேறிய நிலையில், நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பேசியபோது, 'நாட்டில் நவீனமான, சுதந்திரமான, ஒரேசீரான தீர்ப்பாய நடைமுறையை உறுதி செய்வதே மசோதாவின் நோக்கமாகும். அதன்படி, தேசிய தீர்ப்பாய ஆணையம் அமைப்பதை மையக்கருவாக கொண்டுள்ளது' என்றார்.

இதைத் தொடர்ந்து, குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

# நவோதயா வழக்கு: இடைக்கால உத்தரவை திரும்ப பெறக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனு

நமது நிருபர்

**புது தில்லி, ஆக.11:** ஜவஹர் நவோதயா பள்ளிகள் வழக்கில் கடந்த ஆண்டு டிசம்பர் 15-ஆம் தேதியிட்ட இடைக்கால உத்தரவை திரும்பப் பெறக் கோரி தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் அண்மையில் மனு தாக்கல் செய்துள்ளது.

இந்தவிவகாரத்தில்உச்சநீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், 'தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நவோதயா வித்யாலயாவை நிறுவுவதற்குத் தேவையான நிலத்தின் அளவை அடையாளம் காண வேண்டும். இந்த நடவடிக்கை ஆறு வார காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்' என்று கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழக பள்ளிக் கல்வித் துறை சார்பில் கடந்த ஆக.7-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தமிழ்நாட்டில் ஜவஹர் நவோதயா வித்யாலயாக்களை (ஜேஎன்வி) நிறுவுவதற்கான முன்மொழிவை வெறும் நிர்வாக முன்மொழிவாக மட்டும் கருத முடியாது. தற்போதைய வழக்கானது, மாநில நிர்வாகத்தை ஒரு மத்திய நிர்வாகத் திட்டத்தின் மூலமாகவோ அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலமாகவோ, ஒரு மாநில சட்டத்துக்கு முரணான வகையில் செயல்பட கட்டாயப்படுத்த முடியுமா என்ற ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. இது, கடந்த ஆண்டு டிச.15-ஆம் தேதியிட்ட உச்சநீதிமன்ற இடைக்கால உத்தரவின் செல்லுபடித் தன்மையையே கேள்விக்குள்ளாக்குகிறது.

ஜேஎன்வி-க்களை நிறுவ கட்டாயமாக்கும் எந்த மத்திய சட்டமும் இல்லை. இது தொடர்பான நிர்வாக அதிகாரத்தை மத்திய அரசுக்கு அரசமைப்புச் சட்ட விதி ஏதும் வழங்கவில்லை. எனவே, ஜேஎன்வி திட்டத்தைச் செயல்படுத்துமாறு மாநில அரசைக் கட்டாயப்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை.

அரசமைப்புச் சட்டம், மாநில விவகாரங்கள் மீதான பிரத்யேக அதிகாரத்தை மாநில அரசுக்கும் அதன் சட்டப்பேரவைக்கும் வழங்குகிறது. எனவே, ஒரு நீதிமன்றம், மாநிலத்திடம் அதன் நிலத்தை ஒப்படைக்கவோ ஒதுக்கீடு செய்யவோ கட்டாயப்படுத்தும் உத்தரவைப் பிறப்பிக்க முடியாது என்று அந்த மனுவில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**பின்னணி:** தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிகளை நிறுவக் கோரி குமரி மகாசபா தாக்கல் செய்த வழக்கில், நவோதயா பள்ளிகள் 'தமிழ்நாடு தமிழ்வழி கற்றல் சட்டம் 2006'-ஐ மீறாது என்று கூறி, 2 மாதங்களுக்குள் 240 மாணவர்களுக்கு தற்காலிக தங்குமிடம் வழங்கி பள்ளிகளைத் திறக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை கடந்த 2017, செப்.11-ஆம் தேதி உத்தரவிட்டது. அதை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்த நிலையில், உயர்நீதிமன்ற உத்தரவுக்கு 2017, டிச.11-ஆம்தேதி உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. பின்னர், கடந்த ஆண்டு டிச.15-ஆம் தேதி அந்த இடைக்காலத் தடையை நீக்கிய உச்சநீதிமன்றம், தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நவோதயா பள்ளிகளை நிறுவுவதற்குத் தேவையான நிலங்களை அடையாளம் காணுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.